**எங்கள் உள்ளூராட்சி அரசாங்கம், எமக்கானது**

**<u>எங்களது உள்ளூராட்சி அரசாங்கம்</u>**

**கனடாவிலுள்ள எங்களது அரசாங்கத்தைப் பற்றி**

ரொறன்ரோ நகரசபை எங்களது உள்ளூராட்சி அரசாங்கமாகும், இது மாநகர அரசாங்கம் என்றும் அறியப்படும். கனடாவில், எம்மிடம் சமஷ்டி, மாகாண, மாநகர என்று மூன்று அரசாங்க மட்டங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மட்டமும் வித்தியாசமான பொறுப்புக்களைக் கொண்டிருப்பதுடன், பொதுவாக ஒன்றிணைந்து செயற்படுகின்றன. ரொறன்ரோ நகரசபை எமது அன்றாட வாழ்வில் நேரடித் தாக்கத்தைக் கொண்டுள்ள சேவைகளை வழங்குகிறது.

**மாநகர** அரசாங்கம்

**ரொறன்ரோ நகரசபை உங்களது உள்ளூராட்சி அரசாங்கமாகும், அது பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாயிருக்கிறது**: நீர்ப் பரிகரிப்பு, பூங்காக்கள், நூலகங்கள், குப்பை சேகரிப்பு, பொதுப் போக்குவரத்து, நிலப் பாவனைத் திட்டமிடல், போக்குவரத்துச் சைகைகள், பொலிஸ், துணை மருத்துவச் சேவைகள், தீயணைப்புச் சேவைகள், வடிகால்கள், வீடற்றோருக்கான புகலிடங்கள், சிறுவர் பராமரிப்பு, கேளிக்கை நிலையங்கள், இன்னும் பல. மேற்கூறிய அதிகாரங்கள் ரொறன்ரோ நகரச் சட்டம், 2006ஆல் வரையறுக்கப்படுகின்றன.

மாகாண அரசாங்கம்

**ஒன்ராறியோ அரசாங்கம் பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாயிருக்கிறது**: சுகாதாரம், கல்வி, சாரதி அனுமதிப்பத்திரமும் வாகன அனுமதிப்பத்திரமும், மின்சக்தி, மனித உரிமைகள், இயற்கை வளங்கள், சூழல், சமூக சேவைகள், இன்னும் பல. மேற்கூறிய அதிகாரங்கள் அரசியலமைப்புச் சட்டம், 1867ஆல் வரையறுக்கப்படுகின்றன.

சமஷ்டி அரசாங்கம்

**கனடா அரசாங்கம் பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாயிருக்கிறது**: தேசிய பாதுகாப்பும் கனேடிய ஆயுதப் படைகளும், அஞ்சற் சேவை, வங்கியியல், தொழில், குடியுரிமையும் குடிவரவும், சனத்தொகைக் கணக்கெடுப்பு, வெளிநாட்டு விவகாரங்களும் சர்வதேச வர்த்தகமும், விவசாயம்,
இன்னும் பல. மேற்கூறிய அதிகாரங்கள் அரசியலமைப்புச் சட்டம், 1867ஆல் வரையறுக்கப்படுகின்றன.

**<u>றொறன்ரோ நகரத் தகவல்கள் -</u>** 2019 புள்ளிவிபர எண்ணிக்கைகளின் அடிப்படையில்

- கிட்டத்தட்ட 2.9 மில்லியன் மக்கள்
- 150+ நகரச் சேவைகள்
- 5,600 கி.மீ. தெருக்கள்

- 6,100 கி.மீ. நீர் வழிகள்
- 83 தீயணைப்பு நிலையங்களும், 45 நோயாளர் காவும் நிலையங்களும்
- 1600 பெயரிடப்பட்ட பூங்காக்கள்
- 100 நூலகங்கள்

**எங்களது சபையைப் பற்றி**

நகர சபை நகரளாவிய அடிப்படையில் தெரிவு செய்யப்படும் நகரபிதா, நகரின் ஒவ்வொரு குறிச்சியிலும் தெரிவு செய்யப்படும் 25 சபைஉறுப்பினர்களால் ஆனது. நகரபிதா மற்றும் சபையுறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சபையில் ஒரு வாக்கைக் கொண்டுள்ளனர். பெரும்பான்மையான வாக்குகள் பெரும்பாலான விஷயங்களை முடிவு செய்யும். நகரபிதாவும் சபையுறுப்பினர்களும் ஒரு அரசியல் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் சுயமாக்கச் செயல்படுவதுடன், எந்தவொரு பிரச்சினையிலும் வாக்களிப்பது எப்படி என்பதை அவர்கள் தேர்வு செய்யலாம்.

**நகரபிதா** நகர சபைக்குத் தலைமை தாங்குவதுடன்,

- கனடாவெங்கிலும், உலகம் முழுவதிலும் ரொறன்ரோவைப் பிரதிநிதித்துவம் செய்கிறார்.
- வெவ்வேறு அரசாங்க மட்டங்களுடன் செயற்படுகிறார்.

- நிறைவேற்றுக் குழுவுக்குத் தலைமை வகிக்கிறார்.
- நகர சபையின் நிலைக் குழுக்களுக்குத் தலைமை வகிக்க சபையுறுப்பினர்களை நியமிக்கிறார்.

சபையுறுப்பினர்கள் நகர நிகழ்ச்சித் திட்டங்களையும் சேவைகளையும் பற்றி குடியிருப்பாளர்களுடனும், வணிகங்களுடனும், சமுதாயத்துடனும் உரையாடுவதுடன் அவர்களின் கவலைகளைப் பற்றிச் செவிமடுக்கின்றனர். சபையுறுப்பினர்கள்:

- நகர சபை, குழுக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கின்றனர்.
- நகர முகவரகங்களினதும் கூட்டுத்தாபனங்களினதும் சபைகளில் அமர்கின்றனர்.
- நகர சபை மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு மாற்றங்களை முன்மொழிகின்றனர்.
- பிரச்சினைகளைப் பற்றிய நடவடிக்கையை முன்மொழிவதற்கான அல்லது விழிப்புணர்வைக் கூட்டுவதற்கான கோரிக்கைகளை முன் வைக்கின்றனர்.
- பொதுமக்களிடமிருந்து உள்ளிடுகைகளைப் பெறுவதற்கான சமுதாயக் கூட்டங்களை நடத்துகின்றனர் அல்லது அவற்றுக்குச் சமுகமளிக்கின்றனர்.
- சமுதாய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றனர் அல்லது அவற்றில் ஈடுபடுகின்றனர்
- மக்களுக்கு நகரச் சேவைகளை அணுக உதவுகின்றனர்

சபையுறுப்பினர் சிலர் குழுக்களுக்கு அல்லது மன்றங்களுக்குத் தலைமை தாங்குவதன் மூலம் மேலதிகப் பொறுப்புக்களை மேற்கொள்கின்றனர்.

நகரபிதாவும், சபையுறுப்பினர்களும் பல்வேறுபட்ட சமுதாயங்களினதும் ஆர்வங்களினதும் தேவைகளை நகரெங்கிலும் சமப்படுத்தியாக வேண்டும். அவர்களின் வேலைப்பளுவையும் மிக விரிவான ஆய்வுப் பொருட்களையும் முகாமை செய்வதற்காக, நகர சபை குழு முறையொன்றைப் பயன்படுத்துகிறது. நிலைக் குழுக்கள், சமுதாயச் சபைகள் என இரு வகையான குழுக்கள் காணப்படுகின்றன. நகர சபை சில பொறுப்புக்களை நகர மன்றங்களுக்கு ஒப்படைப்பதன் மூலமும் தனது வேலைப்பளுவை முகாமை செய்கிறது.

ஒவ்வொரு குழுவும் 5 முதல் 8 வரையான சபையுறுப்பினர்களால் ஆனது. குழுக்கள் பொதுமக்களிடமிருந்து செவிமடுத்து, குறிப்பான விடயங்கள் தொடர்பில் நகர சபைக்கு பரிந்துரைகளைச் செய்கின்றன. நகர சபையும் அதன் குழுக்களும் ஆண்டு முழுவதும் ஒரு மாதச் சுழற்சியில் கூடுகின்றன. ஒவ்வொரு சுழற்சியும் குழுக் கூட்டங்களில் தொடங்கி, ஒரு முழுமையான நகர சபைக் கூட்டத்துடன் முடிவடைகிறது.

**நிலைக் குழுக்கள்** - பூங்காக்கள், பாதீடு, பாதைகளும் பாலங்களும், குப்பைகளும் மீள்சுழற்சியும், வீட்டு வசதி, திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, அனுமதிப்பத்திரம் வழங்குதல் முதலியன போன்ற நகரளாவிய பிரச்சினைகள் தொடர்பில் பரிந்துரைகளைச் செய்கின்றன. இறுதித் தீர்மானங்கள் நகர சபைக் கூட்டங்களில்

மேற்கொள்ளப்படுகின்றன.  நகர பிதாவையும் நான்கு  நிலைக் குழுக்களையும் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்று காணப்படுகிறது:

- சமுதாய அபிவிருத்தி மற்றும்  பொருளாதார அபிவிருத்தி குழு
- அரசாங்க முகாமைத்துவம் மற்றும்  அனுமதிப்பத்திரம் வழங்குதல் குழு
- கட்டமைப்பு  மற்றும் சூழல் குழு
- திட்டமிடலும் மற்றும்  வீட்டு  வசதி  துறைக்  குழு

**சமுதாயச் சபைகள்** - போக்குவரத்து விளக்குகள், மரம் அகற்றுதல், பூங்கா அனுமதிகள், வேலியிடற் சட்டவிதிகள், உள்ளூர் மன்றங்கள், உள்ளூர்த் திட்டமிடல், அபிவிருத்தி விண்ணப்பங்கள் என்பவற்றுக்கான உள்ளூர்ப் பிரச்சினைகள் தொடர்பில் பரிந்துரைகளைச் செய்கின்றன. அவர்கள் நகர சபைக்குச் செல்லாமலேயே சில இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ளலாம். சமுதாயச் சபைகள் நான்கு காணப்படுகின்ற அதே வேளை, அவை ஒவ்வொன்றும் நகரின் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன:

- எட்டோபிக்கோக்கு யோர்க்
- ரொறன்ரோவும் கிழக்கு யோர்க்கும்
- வடக்கு யோர்க்கு
- இஸ்கார்பறோ

**முகவரகங்களினதும் கூட்டுத்தாபனங்களினதும் மன்றங்கள்** - நகர சபையின் சார்பாக பல்வேறு நகரச் சேவைகளையும் பராமரித்து

முகாமையும் செய்கின்றன.  முகவரகங்களினதும் கூட்டுத்தாபனங்களினதும் மன்றங்களில் நகரை நிர்வகிக்கத் தமது திறமைகளையும் அனுபவத்தையும் பங்களிக்கும் சபையுறுப்பினர்களும் பொதுமக்களும் உள்ளடங்குகின்றனர். முகவரகங்களினதும், கூட்டுத்தாபனங்களினதும் உதாரணங்களில் TTC, ரொறன்ரோ மிருகக்காட்சிச்சாலை, ரொறன்ரோ நீர்மின் என்பன உள்ளடங்குகின்றன.

ரொறன்ரோ நகரசபைச் சட்டம் என்பது மாகாண அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள சட்டவாக்கமாகும்.  இச்சட்டம் நகருக்கு தீர்மானங்களை மேற்கொள்ளவும் பொதுமக்களுக்குத் தேவையான சேவைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்கவும் அதிகாரமளிக்கிறது.

## டொராண்டோ பொதுச் சேவை

அரசாங்கச் சேவை டொராண்டோ பொதுச் சேவை துணைவிதியினால் வழிநடத்தப்படுகிறது, இது நகர நிர்வாகத்திற்கும் நகர சபைக்கும் இடையிலான செயல்பாடுகளை வரையறுக்கிறது. பொதுத்துறைச் சேவையின் தொழில்முறை, பாரபட்சமற்ற மற்றும் நெறிமுறை தரநிலைகளை இது வரையறுக்கிறது.

நகர மேலாளர் தான் பொதுச் சேவைத் தலைவர் மற்றும் அவர் நகர சபைக்குப் பொறுப்பாவார். நகர மேலாளர் இவற்றுக்குப் பொறுப்பேற்கிறார்:

• அனைத்து நகர பிரிவுகளுக்கும் சேவைகள் வழங்குதல், கொள்கை வழிமுறை மற்றும் திட்டம் வழங்குதல்

• சபையைப் பொறுத்தவரை, நிர்வாக பொறுப்புணர்வு மற்றும் மூலோபாய தலைமைக்கு பொறுப்பேற்கும் ஒற்றை நபராக இருத்தல்

• டொரொண்டோ பொதுச் சேவைக்கு நிறுவன தலைமையினை வழங்குதல்.

நகரபிதாவின் பரிந்துரையின் பேரில், நகர நிர்வாகி சபையினால் நியமிக்கப்படுகிறார், மேலும் அவருக்கு உதவ மூன்று துணை நகர மேலாளர்கள் மற்றும் ஒரு தலைமை நிதி அதிகாரி உள்ளனர்.

நகர குமாஸ்தா நகரத்தின் ஒரு அதிகாரி ஆவார் மற்றும் அவரின் கடமைகள் மாகாண சட்டத்தில் கோடிட்டு காட்டப்பட்டு சபையினால் நியமிக்கப்படுகிறது. குமாஸ்தாவை சபை நியமிக்கிறது, சட்டப் பொறுப்புகளுக்கு இவர் சபைக்கு பதிலளிகக வேண்டும், அத்துடன் மேலான்மைப் பொறுப்புகளுக்கு இவர் நகர மேலாளருக்கு பதிலளிக்க வேண்டும்.

நகர குமாஸ்தாவின் அலுவலகம் வழங்கும் சேவைகள் பின்வருவனவற்றை உள்ளிடும்:

- சபையின் முடிவெடுக்கும் செயல்முறைகளை ஆதரவளித்தல்
- கழக தகவல் மேலாண்மை
- நகரபிதா மற்றும் சபை உறுப்பினர்களுக்கு அவர்களது விழா மற்றும் சமூகக் கடமைகளில் உதவுதல்
- மாகாணம் பொறுப்பேற்றிருக்கும் துறைகளில் பொதுஜன சேவை வழங்குதல், திருமண சாண்றுரிமை வழங்குதல் போன்றவை
- சபை உறுப்பினர்கள் மற்றும் நேர்மை ஆணையர், லாபியிஸ்ட் பதிவாளர் மற்றும் ஆம்புட்ஸ்மேன் ஆகியோருக்கு நிர்வாகம், பட்ஜெட் மற்றும் வர்த்தகம் தொடர்பான ஆதரவு வழங்குதல்
- தேர்தல்கள் நடத்துதல்

நகர வழக்கறிஞர் சட்டச் சேவைகள் பிரிவை மேற்பார்வையிடுகிறார், அத்துடன் சட்ட விடயங்களில் சபைக்கு பதிலளிக்கிறார் மற்றும் மேலாண்மை விடயங்களில் நகர மேலாளருக்கு பதிலளிக்கிறார்.

பிரிவுகளும் பிரிவுத் தலைவர்களும் நகர பிரிவுகளை மேலாண்மை செய்வதற்குப் பொறுப்பாவர். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நகர்ச்சி சேவைகளை பிரிவுகள் வழங்குகின்றன. பிரிவுத் தலைவரின் பொறுப்புகள் பின்வருமாறு:

- நிலைக்கு குழுக்கள் மற்றும் சபைக் கூட்டங்களில், தங்களின் திட்டங்கள் மற்றும் சேவைகளை பற்றிய கேள்விகளுக்கு பதிலளித்தல்
- தங்களது பிரிவுக்கான சேவை இலக்குகளை அமைத்து, அதன் மேம்பாட்டைக் கண்காணித்தல்
- தினசரி செயல்பாடுகள்
- தங்களது சேவைக்குள்ளான பணியாளர்கள் மற்றும் பட்ஜெட்
- சபை முன்னுரிமை அளிப்பவற்றை பூர்த்தி செய்ய இணைந்து செயல்படுவது

ஒற்றுமையே நமது பலம் என்பது ரொரண்ரோ நகர கோட்பாடு. ரொரண்ரோ நகரம் உள்ளடக்கியிருக்கும் ஏழு முன்னாள் நகராட்சிகளின் ஒட்டுமொத்த பலத்தையும் இது குறிக்கிறது.

**உங்களது உள்ளூராட்சி அரசாங்கத்தை அணுகுதல்**

ரொறன்ரோ நகரம் தனது குடியிருப்பாளர்களுக்கு பல சிறந்த நிகழ்ச்சித் திட்டங்களையும் சேவைகளையும் வழங்குகிறது. நீங்கள் இச்சேவைகளை அணுகும் முறையை அறிந்திருப்பதை உறுதிப்படுத்துவது அதன் மிக முக்கியமான ஒரு பகுதியாகும். நீங்கள்

நகரச் சேவைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் பற்றிய தகவல்களைத் தேடும் போது தொடங்க வேண்டிய முக்கிய இரு இடங்கள் காணப்படுகின்றன: **toronto.ca** இற்குச் செல்லுங்கள் அல்லது **311** ஐ அழையுங்கள். ரொறன்ரோ நகர வலைத்தளமாகிய **toronto.ca** உங்களது நகரில் என்ன நடக்கிறதெனக் கண்டு கொள்ளவும், புதிய நிகழ்ச்சித் திட்டங்களைப் பற்றி அறியவும், தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஒரு சிறந்த வளமாகும். **311** என்பது நீங்கள் தகவல்களைப் பெறுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய மிகப் பயனுள்ள ஒரு கருவியுமாகும். **311** ஐத் தொடர்பு கொள்வதன் மூலம் நீங்கள் இனியும் தகவல்களை அல்லது உதவி பெறுவதற்காக நகரில் சரியான பிரிவை அல்லது ஆளைக் கண்டு கொள்ள முயல வேண்டியதில்லை.

- **வலைத்தளம்: Toronto.ca/311**
- **தொலைபேசி இலக்கம்: 311**
- **Twitter: @311toronto**

உங்களது உள்ளூராட்சி அரசாங்கம் திறந்ததாகவும், வெளிப்படையானதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக, ரொறன்ரோ நகரசபை நான்கு பொறுப்புக்கூறல் அலுவலர்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் வெவ்வேறு பொறுப்பைக் கொண்டுள்ளார்:

- **கணக்காய்வாளர் தலைமை அதிபதி** – நகரின் நிகழ்ச்சித் திட்டங்களையும் சேவைகளையும் கணக்காய்வு செய்வதுடன் வஞ்சகம், கழிவு என்பன பற்றிய விசாரணைகளை மேற்கொள்கிறார்.

- **நேர்மை பற்றிய ஆணையாளர்** - நகர சபையினதும் உள்ளூர் மன்றங்களினதும் உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்குவதுடன் நடத்தைக் கோவையைப் பற்றிய முறைப்பாடுகளைத் தீர்த்து வைக்கிறார்.
- **ஆதரவு தேடற் பதிவாளர்** – ஆதரவு தேடற் செயற்பாடுகளைப் பற்றிப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துதல், ஆதரவு தேடல் நடத்தையை முறைப்படுத்துதல் என்பவற்றைக் கண்காணிப்பதுடன் அவற்றை முகாமை செய்கிறார்.
- **முறைகேள் அதிகாரி** – நகரச் சேவைகள் தொடர்பான பிரச்சினையை தீர்க்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், அதை பற்றிய புகார்களுக்குச் செவிசாய்த்து ஆராய்கிறார். இந்தச் சேவை இலவசமானது மற்றும் அனைவருக்குமானது.

பொறுப்புக்கூறல் அலுவலர்களைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கும், அவர்களைத் தொடர்பு கொள்ளும் முறையைக் கண்டு கொள்ளவும் **toronto.ca/accountability** இற்குச் செல்லுங்கள்.

## **ரொறன்ரோ குறிச்சிகள்**

ரொறன்ரோ நகரம் குறிச்சிகள் எனப்படும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குறிச்சியும் ஒரு பெயராலும் எண்ணாலும் அடையாளங் காணப்படுவதுடன், சபையுறுப்பினர் எனப்படும் தெரிவு செய்யப்படும் ஒரு அதிகாரியைக் கொண்டிருக்கிறது. உங்களது குறிச்சியிலுள்ள சபையுறுப்பினர் உங்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறார். முழு நகரையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு நகரபிதாவும் இருக்கிறார். குறிச்சிகள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு பகுதியும் அக்குறிச்சிகளைச் சேர்ந்த சபையுறுப்பினர்களாலான ஒரு சமுதாயச் சபையைக் கொண்டுள்ளது.

உங்களது சபையுறுப்பினர் மற்றும் குறிச்சியைக் கண்டறிய, **toronto.ca/councillors** ற்குச் செல்லவும் அல்லது 311 ஐ அழைக்கவும்.

**1 ஆம் குறிச்சி** - எட்டோபிக்கோக்கு வடக்கு

**2 ஆம் குறிச்சி** - எட்டோபிக்கோக்கு மத்தி

**3 ஆம் குறிச்சி** - எட்டோபிக்கோக்கு-ஏரிக்கரை

**4 ஆம் குறிச்சி** - பார்க்டேல்-ஹை பார்க்கு

**5 ஆம் குறிச்சி** - யோர்க்கு தெற்கு-வெஸ்டன்

**6 ஆம் குறிச்சி** - யோர்க்கு மத்தி

**7 ஆம் குறிச்சி** - ஹம்பர் ரிவர் - பிளாக் கிரீக்

**8 ஆம் குறிச்சி** - எக்லிண்டன்-லோறன்ஸ்

**9 ஆம் குறிச்சி** - டெவன்போர்ட்டு

**10 ஆம் குறிச்சி** - யோர்க்கு மத்தி

**11 ஆம் குறிச்சி** - பல்கலைக்கழகம் - ரொஸ்டேல்

**12 ஆம் குறிச்ச -** யோர்க்கு தெற்கு-வெஸ்டன்

**13 ஆம் குறிச்சி** - ரொறன்ரோ - மத்தி

**14 ஆம் குறிச்சி** - ரொறன்ரோ-டான்போர்த்து

**15 ஆம் குறிச்சி** - டொன் வெளி மேற்கு

**16 ஆம் குறிச்சி** - டொன் வெளி கிழக்கு

**17 ஆம் குறிச்சி** - டொன் வெளி - வடக்கு

**18 ஆம் குறிச்சி -** வில்லோடேல்

**19 ஆம் குறிச்சி -** கரையோரங்கள்-கிழக்கு யோர்க்கு

**20 ஆம் குறிச்சி -** இஸ்கார்பறோ தென்மேற்கு

**21 ஆம் குறிச்சி** - இஸ்கார்பறோ மத்தி

**22 ஆம் குறிச்சி** - இஸ்கார்பறோ-அகின்கோர்ட்டு

**23 ஆம் குறிச்சி** - இஸ்கார்பறோ- வடக்கு

**24 ஆம் குறிச்சி** - இஸ்கார்பறோ-கில்டுவூட்

**25 ஆம் குறிச்சி** - இஸ்கார்பறோ-றூஜ் பார்க்

மேலும் விவரங்களுக்கு **toronto.ca/wardboundaries** ஐப் பார்க்கவும்

## தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் முறை

சபையின் உறுப்பினர்களின் தீர்மானமெடுத்தற் செயன்முறையிலும், ஆலோசனை அமைப்புக்கள், முகவரகங்கள், கூட்டுத்தாபனங்கள், நகர

ஊழியர்கள் ஆகியோரின் அறிக்கைகளிலும் பிரச்சினைகள், கருத்துக்கள், முன்மொழிவுகள் என்பன ஏற்படுகின்றன. நீங்கள் தகவல்களைப் பெறவும் உங்களது கருத்தைப் பகிர்ந்து கொள்ளவும் சமுகமளிக்கக்கூடிய ஆலோசனைக் கூட்டங்களை நகரசபை ஊழியர்கள் நடத்தக்கூடும்.

விடயங்கள் பின்னர் ஒரு சமுதாயச் சபைக்கு அல்லது நிலைக் குழுவுக்குச் செல்லும். நீங்கள் ஒரு கூட்டத்தில் பேசுவதன் மூலம் அல்லது எழுத்து மூலம் உங்களது கருத்துரைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் குழு உறுப்பினர்களுடன் உங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

சில வேளைகளில், சமுதாயச் சபைகள் ஒரு இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளலாம். வேறு விடயங்களுக்காக, நகர சபைக்கு ஒரு பரிந்துரை செய்யப்படுகிறது. நகர சபையில், குழுக்களிடமிருந்தும், சமுதாயங்களிடமிருந்தும் பெறப்படும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றன. மேலதிகமாக, சபையின் உறுப்பினர்களிடமிருந்து அல்லது நகரசபை ஊழியர்களிடமிருந்து பெறப்படும் அவசரமான புதிய விடயங்கள் நேரடியாக நகர சபைக்குச் செல்லலாம்.

நீங்கள் நகர சபைக் கூட்டங்களுக்கு நேரடியாகச் செல்லலாம், அவற்றை இணையவழியில் பதிவிறக்கலாம் அல்லது தொலைக்காட்சியில் பார்க்கலாம்.

விடயங்கள் தொடர்பில் நகர சபை ஒரு இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளலாம். மேலதிகத் தகவல்களுக்காக நகர சபையினால் அல்லது குழுக்களால் விடயங்கள் மீளப் பரிசீலிக்கப்படலாம்.

ஒரு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதும், நகர சபை தீர்மானத்தை உறுதிப்படுத்தும் ஒரு சட்டவிதியைச் சட்டமாக்குகிறது. பின்னர் நகர சபை ஊழியர்கள் தீர்மானத்தைச் செயற்படுத்துவர்.

கொள்கைகள் மற்றும் சேவைகளை பற்றி பொதுமக்கள் தங்களின் கருத்துக்களை பணியாளர்களிடமும், சபைஉறுப்பினர்களிடமும் கூற முடியும், மற்றும் 311 ஐ தொடர்பு கொண்டும் கூற முடியும்.

**அறிவுறுத்தப்படுங்கள்**

அறிவுறுத்தப்படுவது தீர்மானமெடுப்பதிற் கலந்து கொள்வதற்கான ஒரு சிறந்த முதற்படியாகும்.

**நகர சபை, குழுக் கூட்டங்களைப் பாருங்கள்**

நகர சபைக் கூட்டங்களும், குழுக் கூட்டங்களும் நகர மண்டபத்திலும் குடியியல் நிலையங்களிலும் இடம் பெறுகின்றன. நீங்கள் சமுகமளிப்பது எப்போதும் வரவேற்கப்படுவதுடன், நுழைவுச் சீட்டுக்கள் தேவைப்படுவதில்லை. நீங்கள் அங்கு நேரடியாகச் சமுகமளிக்க முடியாவிடின், நீங்கள் கூட்டங்களை இணையவழியில் பதிவிறக்கலாம். ஒரு கூட்டம் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படாதிருப்பது

இரகசியமான தகவல்கள் கலந்துரையாடப்படும் வேளையில் மட்டுமேயாகும்.

**Toronto.ca/council** இல் பின் தொடருங்கள்

நீங்கள் நகர சபையின் **toronto.ca/council** வலைத்தளத்தில் நிகழ்ச்சி நிரல்கள், தீர்மானங்கள் முதலியவற்றைக் கண்டு கொள்ளலாம்.

நீங்கள் பரிந்துரைகள், பின்னணி அறிக்கைகள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள் என்பன உட்பட சபையுறுப்பினர்கள் தமது கூட்டங்களுக்கு முன்னர் பெறும் அதே தகவல்களை அணுகலாம். நிகழ்ச்சி நிரல்கள் கூட்டங்களுக்கு ஒரு கிழமைக்கு முன்னரே வெளியிடப்படுவதுடன், தகவல்கள் சேர்க்கப்படும் போதும் இற்றைப்படுத்தப்படுகின்றன. குழுக்களினதும் நகர சபையினதும் தீர்மானங்கள் வழமையாக அதே நாளில் அல்லது மறு நாளில் வெளியிடப்படுகின்றன.

நீங்கள் நகர சபையின் **toronto.ca/council** வலைத்தளத்தில் நிகழ்ச்சி நிரல்கள், தீர்மானங்கள் முதலியவற்றைக் கண்டு கொள்ளலாம்.

உங்களது அயலகத்தைப் பாதிக்கின்ற நிகழ்ச்சி நிரலிலுள்ள விடயங்களை அல்லது நீங்கள் ஆர்வமாயுள்ள பிரச்சினைகளைப் பற்றித் தேடுவதற்காக நகர சபை வலைத்தளத்தைப் பயன்படுத்துங்கள். நீங்கள் நகரபிதாவினதும் சபையுறுப்பினர்களினதும் சமுகமளித்தல், வாக்களித்தற் பதிவுகளையும் பார்க்கலாம்.

**மின்னஞ்சல் இற்றைப்படுத்தல்களுக்குச் சந்தாதாரராகுங்கள்**

நகர சபையினதும் குழுக்களினதும் மின்னஞ்சல் இற்றைப்படுத்தல்களுக்குச் சந்தாதாரராவது அறிவுறுத்தப்பட்டவராக இருப்பதற்கான ஒரு சிறந்த வழியாகும். நீங்கள் கலந்துரையாடப்படும் விடயத்தையும் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்களையும் பற்றியும் வாசிக்கலாம். சந்தாதாரராக **toronto.ca/e-updates** இற்குச் செல்லுங்கள்.

**சமூக ஊடகங்களில் பின் தொடருங்கள்**

கலந்துரையாடலிற் சேர்ந்து, அறிவுறுத்தப்பட்டவராக இருங்கள்.

**Youtube:** youtube.com/c/TorontoCityCouncilLive
**Twitter:** @TorontoCouncil
**Facebook:** Facebook.com/torontocityclerk
**Instagram:** @torontoclerk

**பொது அறிவித்தல்கள் காணுங்கள்**

குழுக்கள் மற்றும் சபைக் கூட்டங்கள், புதிய சட்டவிதிகள், நகரசபைச் சொத்து விற்பனை, நகரத் திட்டமிடலுக்கான மாற்றங்கள், புதிய சைகைகள், கட்டணங்கள், வேறு விடயங்கள் என்பவற்றைப் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக நகரசபை பொது அறிவித்தல்களை வெளியிடுகிறது. அறிவித்தல்கள் செய்தித்தாள்களில் இடப்படுகின்றன, தனிப்பட்ட வீடுகளுக்கு அஞ்சலிடப்படுகின்றன, அல்லது toronto.ca/notices இல் பிரசுரிக்கப்படுகின்றன.

**தகவல்களை அணுகுங்கள்**

நீங்கள் ரொறன்ரோ நகரசபை பற்றிய தகவல்களை அணுகக்கூடிய பல வழிகள் காணப்படுகின்றன. நகரச் சேவைகளைப் பற்றிய அவசரமல்லாத தகவல்கள் **311** ஐ அழைப்பதன் மூலம் கிடைக்கப் பெறுகின்றன, அல்லது நீங்கள் நேரடியாக நகரசபை ஊழியர் குழாத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

பல வகையான நகரத் தகவல்களை கேட்காமலேயே பெற முடியும், உதாரணமாக:

- ரொறன்ரோ நகரசபை ஆவணக் காப்பகம் நகர சபைச் சட்டவிதிகள், வான் வரைபடங்கள், ஒளிப்படங்கள், அயலகத் திட்டங்கள், கணிப்பீட்டுப் பட்டியல்கள், கட்டிடக்கலை வரைவுகள் என்பன போன்ற ரொறன்ரோவின் வரலாற்றை ஆவணப்படுத்தும் பதிவுகளை வைத்திருக்கிறது. மேலதிகத் தகவல்களுக்காக toronto.ca/archives இற்குச் செல்லுங்கள்.
- நகரின் திறந்த தரவுகள் வலைவாசல் உங்களது பயன்பாட்டுக்கான தரவுத் தொகுதிகளை வழங்குகிறது. ஆராய்ச்சி அல்லது செயலிகளை விருத்தி செய்தல் போன்ற பல்வேறு வழிகளில் மக்கள் தரவுகளைப் பயன்படுத்துகின்றனர். எத்தரவுத் தொகுதிகள் கிடைக்கப் பெறுகின்றன என்பதை toronto.ca/open இற்குச் செல்வதன் மூலம் கண்டு கொள்ளுங்கள்.

பொதுமக்களுக்கு ஏற்கனவே கிடைக்கப்பெறாத தகவல்கள் இருந்தால், நீங்கள் தகவலுக்காக உரிமை (FOI) கோரிக்கை ஒன்றை வைக்கலாம். FOI கோரிக்கை ஒன்றை எப்பொழுது, எப்படி வைக்கலாம் என்பதற்கான மேலாதிக்கத் தகவல்களுக்கு toronto.ca/foi க்கு செல்லவும் .

நகரத் தகவல்கள் பொதுப்படையானவை, அத்துடன் அதை அணுக எல்லோருக்கும் உரிமை உண்டு; ஆனாலும், தனிநபர் தகவல்களைக் கொண்டிருக்கும் பதிவுகள் போன்ற சில விதிவிலக்குகள் உள்ளன. தனிப்பட்ட தகவல்களைக் கொண்டிருக்கும் நகர பதிவுகள், உதாரணமாக, தொலைபேசி எண்கள் அல்லது பிறந்த தேதிகள் ஆகியவை கவனமாக நிர்வகிக்கப்பட்டு, இரகசியமாக வைத்திருக்கப்பட்ட வேண்டும்.

நகரத் தகவல்களை எப்படி அணுகுவது என்பது குறித்த மேலதிக தகவல்களுக்கு, toronto.ca/cityrecords ஐ பார்க்கவும்

பாடசாலை, சமுதாயக் குழுக்களுக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆவணக் காப்பகத்திலும் நகர மண்டபத்திலும் கிடைக்கப் பெறுகின்றன.

மேலதிக தகவல்களுக்கு archives@toronto.ca க்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 416-392-5561 ஐ அழைக்கவும்.

ஆவணங்களை தொடருங்கள்:

Twitter @TorontoArchives

Instagram @toronto_archives

**உங்களது கருத்தைக் கூறுங்கள்**

உங்களது கருத்து முக்கியமானதாகும், உங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் நீங்கள் அயலகத்திலும் நகரளாவிய தீர்மானங்களிலும் ஒரு தாக்கத்தைச் செய்கிறீர்கள்.

**உங்களது சபையுறுப்பினரைத் தொடர்பு கொள்ளுங்கள்**

உங்களது உள்ளூராட்சி அரசாங்கத்தைப் பற்றிய சிறந்த விடயங்களிலொன்று சபையுறுப்பினர்களும் நகரபிதாவும் பொதுமக்களால் அணுகக்கூடியவாறு இருப்பதாகும். உங்களது சமுதாயத்தில் நடைபெறும் விடயங்களைப் பற்றிப் பேசுவதற்காக அங்கு உங்களது சபையுறுப்பினர் இருக்கிறார். நீங்கள் ஒரு கேள்வியைக் கொண்டிருந்தால் அல்லது உங்களது கருத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பினால், தொடங்குவதற்கு உங்களது சபையுறுப்பினர் ஒரு சிறந்த இடமாவார்.

பின்வருவனவற்றுக்காக நீங்கள் அழைக்கலாம், மின்னஞ்சலிடலாம் அல்லது உங்களது சபையுறுப்பினரின் வலைத்தளத்துக்குச் செல்லலாம்:

- நகரை அல்லது உங்களது அயலகத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைப் பற்றிய உங்களது கருத்தைப் பகிர்ந்து கொள்ளல்
- நகரசபைச் சேவைகளை அணுக உதவி பெறுதல்
- அவர்களின் அஞ்சற் பட்டியலிற் சேர்தல்

- ஒரு சமுதாய நிகழ்ச்சிக்கு அல்லது கூட்டத்துக்கு உங்களது சபையுறுப்பினரை அழைத்தல்
- உங்களது சபையுறுப்பினர் யாரெனக் கண்டு கொள்வதற்காக **toronto.ca/councillors** இற்குச் செல்லுங்கள், அல்லது **311** ஐ அழையுங்கள்.

## ஒரு குழுக் கூட்டத்திற் கலந்து கொள்ளுங்கள்

சமுதாயச் சபைக் கூட்டங்களும், நிலைக் குழுக் கூட்டங்களும் நகர சபை உறுப்பினர்களிடம் உங்களது கருத்தை நேரடியாக எடுத்துக் கூறுவதற்கான ஒரு வாய்ப்பாகும். நீங்கள் அதனை நேரடியாகவோ எழுத்து மூலமோ மேற்கொள்ளலாம். சமுதயாச் சபைகளும் நிலைக் குழுக்களும் மாத்திரமே பொதுமக்கள் முன்வைக்கும் குறைபாடுகளைச் செவிமடுக்கின்றன. பொதுமக்கள் நகர சபையில் பேச முடியாது. மேலதிகத் தகவல்களுக்காக அல்லது ஒரு குழு எழுதுவினைஞரைத் தொடர்பு கொள்வதற்காக **toronto.ca/council** இற்குச் செல்லுங்கள்.

## குழுவில் ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசுங்கள்

நீங்கள் ஒரு குழுவின் நிகழ்ச்சி நிரலில் பட்டியலிடப்பட்டுள்ள எதைப் பற்றியும் ஐந்து நிமிடங்கள் வரை பேசலாம்.நீங்கள் பேசிய பின்னர் சபையுறுப்பினர்கள் உங்களிடம் கேள்விகளைக் கேட்கக்கூடிய அதே வேளை, உங்களது பெயரும் தொடர்புத் தகவல்களும் கூட்டத்தின் பகிரங்கப் பதிவில் பட்டியலிடப்படும். ஒரு கூட்டத்திற் பேசுவதற்காக, குழு எழுதுவினைஞரிடம் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

கூட்டத்தின் நேரலை ஒளிபரப்பிலும், வீடியோ பதிவிலும் நீங்கள் தோன்றுவீர்கள்.

**நகர சபைக்கு அல்லது குழுவுக்கு எழுதுங்கள்**

நீங்கள் உங்களது கருத்துரைகளை எழுத்து மூலம் குழு எழுதுவினைஞருக்கு மின்னஞ்சலிடுவதன் மூலம், தொலைநகலின் மூலம் அல்லது அஞ்சலிடுவதன் மூலம் சமர்ப்பிக்கலாம். உங்களது பெயர் கூட்டத்தின் பொது பதிவில் பட்டியலிடப்படும், அத்துடன் உங்கள் மின்னஞ்சல், தொலைநகல் அல்லது கடிதம் படித்துப் பார்க்க அனைவருக்கும் கிடைக்கப்பெறும்.

**மனுக்கள்**

ஒரு குழுக் கூட்டத்தின் அல்லது நகர சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலிலுள்ள ஒரு விடயத்தைப் பற்றி எழுதுவினைஞருக்கு அல்லது நகர சபையின் ஒரு ஊழியருக்கு மனுக்கள் சமர்ப்பிக்கப்படலாம். மனுவில் ஒப்பமிட்ட யாவரினதும் பெயர்கள் உட்பட அது பகிரங்கப் பதிவின் ஒரு பகுதியாகும்.

**ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொள்ளுங்கள்**

நகர ஊழியர்கள் கூட்டங்கள், திறந்த இல்லங்கள், இணையவழி மன்றங்கள் முதியன மூலம் உள்ளூர் அல்லது நகரளாவிய பிரச்சினைகளைப் பற்றிய உள்ளிடுகைகளைத் திரட்டுவதற்காக பல்வேறு

வழிகளில் பொதுமக்களிடம் ஆலோசனையைப் பெறுகின்றனர். ஒரு ஆலோசனையிற் கலந்து கொள்வதன் மூலம் நீங்கள் என்ன நடக்கிறது என்பதைக் கண்டு கொள்ளவும் உங்களது கருத்துக்கள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் முடியும். பணத்தைச் செலவழிப்பதற்கான முன்னுரிமைகளை அமைத்தல், துணைவழித் தொகுதி விரிவாக்கப்பட வேண்டிய முறை அல்லது குப்பை பற்றிய ஒரு புதிய உபாயம் என்பன போன்ற தலைப்புக்களில் ஆலோசனைகள் நடத்தப்படலாம். உங்களது சமுதாயத்தில் எவையேனும் ஆலோசனைகள் அல்லது கூட்டங்கள் நடக்கின்றனவாவெனக் கண்டு கொள்ளுங்கள்:

- **வலைத்தளம்**: toronto.ca/involved
- **தொலைபேசி இலக்கம்:** 311
- **Twitter:** @GetInvolvedTO

**உள்ளூர் வாக்கெடுப்பிற் கலந்து கொள்ளுங்கள்**

குடித்தனங்கள் அல்லது வணிகங்கள் உள்ளூர் வாக்கெடுப்பொன்றைப் பற்றிய தகவல்களை அஞ்சல் மூலம் பெறலாம். நகரசபை உங்களது சமுதாயத்தில் நிகழக்கூடிய ஒரு மாற்றத்தைப் பற்றிய கருத்துக்களைத் திரட்டுவதற்காக வாக்கெடுப்புக்களை நடத்துகிறது. நீங்கள் வாக்கெடுப்பின் இறுதி நாளன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருப்பதுடன், வாக்கெடுப்புப் பிரதேசத்திலுள்ள சொத்தின் உரிமையாளராக,

குடியிருப்பாளராக அல்லது வாடகைதாரராக இருந்தால் ஒரு வாக்கெடுப்பில் கலந்து கொள்ளலாம்.

வாக்கெடுப்புத் தலைப்புக்களாக இருக்கக்கூடியனவற்றுள் உள்ளடங்குவன:

- நிழற்சாலைக் கபேயொன்றைத் திறத்தல்
- குறிப்பிட்ட விலாசமொன்றுக்கு முற்றத் தரிப்பிட அனுமதியளித்தல்
- தரிப்பிட மாற்றங்களை அனுமதித்தல்
- வேகத் தடைகள் போன்ற போக்குவரத்து அமைதிப்படுத்தல் நடவடிக்கைகளை நிறுவுதல்
- ஒரு வணிக முன்னேற்றப் பகுதியை (BIA) அமைத்தல்

வாக்களிப்புத் தகவல்களும் பெறுபேறுகளும் இணையவழியிற் பிரசுரிக்கப்படுகின்றன: **toronto.ca/polling**

## உள்ளூர்த் தேர்தல்களில் வாக்களியுங்கள்

மாநகரத் தேர்தல்கள் ஒவ்வொரு நான்காண்டுகளுக்கு ஒருமுறையும் ஒற்றோபர் நான்காம் திங்கட் கிழமை நடைபெறுகின்றன. அடுத்த ஊராட்சி பொதுத் தேர்தல் ஒற்றொபர் 24, 2022 இல் நடைபெறும். தகுதிபெறும் வாக்காளர்கள் நகரபிதா, சபையுறுப்பினர், பாடசாலைச் சபை நம்பிக்கையாளர் என்போருக்காக வாக்களிக்கலாம்.

டொராண்டோவில் உள்ள நான்கு பள்ளி வாரியங்கள் சார்பாக தேர்தலை நடத்த நகரம் பொறுப்பேற்கிறது. பள்ளிக் கொள்கைகளை

அமைத்து கண்காணித்தல், பட்ஜெட்டுகளுக்கு அனுமதி அளித்தால், மற்றும் குடியிருப்போரின் கல்வி ஆர்வங்களை அறிந்து செயல்படுத்தல் ஆகியவை பள்ளி வாரிய டிரஸ்டியின் பொறுப்பாகும். நான்கு பள்ளி வாரியங்கள் பின்வருமாறு:

- **டொராண்டோ மாவட்ட பள்ளி வாரியம் (பொது)**
- **டொராண்டோ கத்தோலிக்க மாவட்ட பள்ளி வாரியம் (கத்தோலிக்கம்)**
- **Conseil scolaire Viamonde (பிரெஞ்சு பொது)**
- **Conseil scolaire catholique MonAvenir (பிரெஞ்சு கத்தோலிக்கம்)**

ஒரு நகர சபை அல்லது பாடசாலைச் சபை ஆசனம் வெற்றிடம் ஆகும் போது பொதுத் தேர்தல்களுக்கிடையில் ஒரு இடைத்தேர்தல் நடைபெறலாம்.

**நீங்கள் பின்வருமாறு இருந்தால் ரொறன்ரோவின் மாநகரத் தேர்தலில் வாக்களிக்கலாம்:**

- ஒரு கனேடியப் பிரசையாக இருத்தல்; அத்துடன்
- குறைந்த பட்சம் 18 வயதுள்ளவராக இருத்தல்; அத்துடன்
- ரொறன்ரோ நகரின் ஒரு குடியிருப்பாளராக இருத்தல்; அல்லது
- ரொறன்ரோ நகரின் குடியிருப்பளராக இல்லாதிருப்பினும் நீங்களோ உங்களது வாழ்க்கைத் துணையோ நகரில் சொத்துக்கு உரித்தாயிருத்தல் அல்லது வாடகை கொண்டிருத்தல்; அத்துடன்
- ஏதேனும் சட்டத்தின் கீழ் வாக்களிக்கத் தடுக்கப்படாதிருத்தல்.

## வாக்காளர் இடாப்பு

வாக்காளர் இடாப்பு என்பது ரொறன்ரோ நகரிலுள்ள தகுதி பெறும் வாக்காளர்களின் பட்டியலாகும்.

ஒன்ராறியோவிலுள்ள ஒவ்வொரு ஊராட்சி மற்றும் பள்ளி வாரியத்திற்குமான வாக்காளர்களின் முதற்பட்டியலை தயாரிப்பது ஊராட்சி சொத்து மதிப்பீட்டு கழகத்தின் (MPAC) பொறுப்பாகும். MPACயின் ஊராட்சி சொத்து மதிப்பீட்டு தரவுதளத்திலுள்ள சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைக்கு குடியிருப்போரின் தகவல்களை பயன்படுத்தி தேர்தல் தினத்துக்கான இறுதி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

மேலும் அறிந்து கொள்ள, **toronto.ca/elections/voters** இற்குச் செல்லுங்கள்.

## ஒரு வாக்களிக்குமிடத்தில் வேலை செய்தல்

ஒவ்வொரு தேர்தலுக்குமாக, நகரெங்கிலுமுள்ள வாக்களிக்குமிடங்களில் வேலை செய்யவதற்கென ரொறன்ரோ நகரசபை ஆட்களை வேலைக்கமர்த்துகிறது. இது சனநாயகச் செயன்முறையிற் பங்குபற்றுவதற்கான ஒரு சிறந்த வழியாகும். நீங்கள் ஒரு தேர்தலில் வேலை செய்வதற்காக ஒரு கனேடியப் பிரசையாக இருக்க வேண்டியதில்லை. பல பணிகள் கிடைக்கப் பெறுகின்ற அதே வேளை, யாவரும் விண்ணப்பிக்குமாறு தூண்டப்படுகின்றனர்.

மேலும் விவரங்களுக்கு, toronto.ca/elections ஐ பார்க்கவும்

**அணுகக்கூடிய தேர்தல்கள்**

உடற்குறைபாடுகளுடன் உள்ள நபர்கள் தேர்தலை முழுமையாக மற்றும் மற்றவர்களை போன்ற அதே நிலையில் தேர்தலை அணுகவும், தனிப்பட்ட முறையில் மற்றும் சுதந்திரமாக வாக்களிக்கவும் முடியும் வகையிலும் இருப்பதை உறுதிப்படுத்துவது நகர எழுதுவினைஞரின் பொறுப்பாகும். வாக்காளர்களுக்கான தாங்கும் வசதிகள் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, visit toronto.ca/VoterAccommodations.

**எதிர்வரும் தேர்தல்களைப் பற்றிய தகவல்களுக்கு:**

- **வலைத்தளம்:** toronto.ca/elections
- **மின்னஞ்சல்:** elections@toronto.ca
- **தொலைபேசி:** 416-338-1111
- **Twitter:** @torontovotes
- **Facebook:** facebook.com/electionservices

**உங்களது நகரத்துக்குச் சேவையாற்றுங்கள்**

உங்களது நகரத்துக்குச் சேவையாற்றுவது உங்களது சமுதாயத்தில் தீர்மானங்களின் மீது நேரடியாகச் செல்வாக்குச் செலுத்த உதவுகிறது.

**ஒரு நகர மன்றத்திற் சேவையாற்ற விண்ணப்பியுங்கள்**

நகரசபை தனது சேவைகளிற் சிலவற்றை முகவரகங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றினூடாக ஆற்றுகிறது. ஒவ்வொரு

முகவரகமும் பொதுமக்களை உள்ளடக்கும் அதற்கேயுரித்தான பணிப்பாளர் சபையைக் கொண்டுள்ளது. நீங்கள் பணிப்பாளர் சபையொன்றின் ஒரு உறுப்பினராக விண்ணப்பிக்கவும், ஏராளமான நிறுவன, சமுதாயச் சபைகளுக்கு உங்களது திறமைகளை வெளிப்படுத்தவும் முடியும்.

300 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் உறுப்பினர்களைக் கொண்ட 50 இற்கு மேற்பட்ட முகவரக, கூட்டுத்தாபனச் சபைகள் காணப்படுகின்றன.

நகர மன்றமொன்றிற் பணியாற்றுவதற்காக நீங்கள் இவ்வாறிருந்தாக வேண்டும்:

- ரொறன்ரோ நகரின் ஒரு குடியிருப்பாளராக இருத்தல்; அத்துடன்
- குறைந்த பட்சம் 18 வயதுள்ளவராக இருத்தல்; அத்துடன்
- நகர சபை உறுப்பினரொருவரின் ஓர் உறவினராக இல்லாதிருத்தல்; அத்துடன்
- நகரசபையின் அல்லது மன்ற ஊழியரொருவராக இல்லாதிருத்தல்.

நீங்கள் எந்நேரத்திலும் toronto.ca/ServeYourCity இல் இணையவழியில் விண்ணப்பிக்கூடிய அதே வேளை, உங்களது விண்ணப்பம் இரண்டு ஆண்டுகளுக்கு கோப்பிலிருக்கும். அத்துடன் நீங்கள் முகவரகங்களினதும், கூட்டுத்தாபனங்களினதும் முழுமையான பட்டியலையும் விபரங்களையும் பார்க்கலாம்.

**புதிய வாய்ப்புக்களைப் பற்றிக் கண்டு கொள்ளுங்கள்:**

- **வலைத்தளம்: toronto.ca/ServeYourCity**

- **மின்னஞ்சல்: appoint@toronto.ca**
- **தொலைபேசி: 416-397-0088**

**ஒரு வேட்பாளராகுங்கள்**

நீங்கள் ஒரு வேட்பாளராகி, அடுத்த நகரபிதாவாக, சபையுறுப்பினராக அல்லது பாடசாலைச் சபை நம்பிக்கையாளராகப் போட்டியிடலாம். அரசாங்கத்தின் உள்ளூர் மட்டத்தில் அரசியற் கட்சிகள் இல்லை. ஒரு வேட்பாளராவதற்காக, வேட்பு மனுக் காலப்பகுதியில், நீங்கள் ஒரு வேட்பு மனுத் தாளைக் கோப்பிடவும், அடையாள அட்டையை வழங்கவும், கோப்பிடல் கட்டணமொன்றைச் செலுத்தவும் வேண்டும்.

**நகரபிதாவாக அல்லது சபையுறுப்பினராகப் போட்டியிடுவதற்கு, நீங்கள் இவ்வாறிருந்தாக வேண்டும்:**

- ஒரு கனேடியப் பிரசையாக இருத்தல்; அத்துடன்
- குறைந்த பட்சம் 18 வயதுள்ளவராக இருத்தல்; அத்துடன்
- ரொறன்ரோ நகரின் ஒரு குடியிருப்பாளராக இருத்தல்; அல்லது
- ரொறன்ரோ நகரில் நில உரிமையாளராக அல்லது வாடகைதாரராக, அல்லது உரிமையாளரின் அல்லது வாடகைதாரரின் வாழ்க்கைத் துணையாக இருத்தல்; அத்துடன்
- வாக்களிப்பதிலிருந்து சட்டப்படி தடுக்கப்பட்டிராதிருத்தல்; அத்துடன்
- மாநகரப் பதவியைக் கொண்டிருப்பதை விட்டும் ஏதேனும் சட்டவாக்கத்தினால் தகுதி நீக்கம் செய்யப்பட்டிராதிருத்தல்.

**நான்கு பள்ளி வாரியங்களுள் எது ஒன்றிலாவது டிரஸ்டியாக இருக்க நீங்கள்செய்யவேண்டியது:**

- ஒரு கனேடியப் பிரசையாக இருத்தல்; அத்துடன்
- குறைந்த பட்சம் 18 வயதுள்ளவராக இருத்தல்; அத்துடன்
- வாரியத்தின் அமைவிடத்திற்கு உட்பட்ட பகுதியின் குடியிருப்பாளராக இருத்தல்; அத்துடன்
- ஏதேனும் சட்டத்தின் கீழ் வாக்களிக்கத் தடுக்கப்படாதிருத்தல்; அத்துடன்
- ஏதேனும் சட்டத்தின் கீழ், ஊராட்சி அலுவலகப் பணியை ஏற்கக்கூடாது என்று தடுக்கப்படாதிருத்தல்.

ஒரு வேட்பாளராகவதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்காக, **toronto.ca/elections/candidates** இற்குச் செல்லுங்கள்

**இணையவழி வளங்கள்**

**உங்களது உள்ளூராட்சி அரசாங்கம்**

- **ரொறன்ரோ நகரசபை முகப்புப் பக்கம்: toronto.ca**
- **ரொறன்ரோவில் வாழ்தல்: toronto.ca/residents**
- **ரொறன்ரோவில் வணிகம் புரிதல்: toronto.ca/business**
- **ரொறன்ரோவுக்கு வருகை தருதல்: toronto.ca/visitors**
- **நகர மண்டபத்தை அணுகுதல்: toronto.ca/city_hall**

- **311 ரொறன்ரோ: toronto.ca/311**

**அறிவுறுத்தப்படுங்கள்**

- **நகர சபை நேரசூசிகள், நிகழ்ச்சி நிரல்கள், நடவடிக்கைக் குறிப்புக்கள், வீடியோக்கள் என்பன: toronto.ca/council**
- **நகர YouTube அலைவரிசை: youtube.com/thecityoftoronto**
- **திறந்த தரவுகள்: toronto.ca/open**
- **மின்னஞ்சல் இற்றைப்படுத்தல்களுக்குச் சந்தாதாரராதல்: toronto.ca/e-updates**
- **ரொறன்ரோ ஆவணக் காப்பகம்: toronto.ca/archives**

**உங்களது கருத்தைக் கூறுங்கள்**

- **உங்களது சபையுறுப்பினரைத் தொடர்பு கொள்ளல்: toronto.ca/councillors**
- **தேர்தற் பணிகள்: toronto.ca/elections**
- **ரொறன்ரோவில் ஈடுபாடு கொள்ளல்: toronto.ca/involved**
- **பொதுமக்கள் ஆலோசனைகள்: toronto.ca/consultations**
- **வாக்கெடுப்பு: toronto.ca/polling**

**உங்களது நகரத்துக்குச் சேவையாற்றுங்கள்**

- ஒரு வேட்பாளராதல்: toronto.ca/elections/candidates
- நகர மன்றமொன்றின் ஒரு உறுப்பினராதல்: toronto.ca/ServeYourCity

**ஒப்புகை:**

இத்தகவல்கள் ரொறன்ரோ நகரசபையின் நகர எழுதுவினைஞரின் அலுவலக ஊழியர்களால் தயாரிக்கப்பட்டன. பொதுமக்கள் ஆலோசனைகள் தவிர, இச்சிற்றேட்டிலுள்ள தகவல்கள் பொதுவாக நகர எழுதுவினைஞரின் அலுவலகத்தால் வழங்கப்படும் சேவைகளைக் குறிக்கின்றன.

2019 இல் பிரசுரிக்கப்பட்டது.